*என் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மண்ணின் மைந்தர்களாகிய தலித் இன தலைவர்களே, பகுத்தறிவாளர்களே, மார்க்சிய தோழர்களே உங்கள் அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கிறேன்.*

*பல்லாண்டு காலமாக அடிமைப்பட்டு, ஒடுக்கப்பட்ட தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட இன மக்களின் முன்னேற்த்தில் தாங்கள் மிகுந்த அக்கரையும், ஆதரவும் கொண்டவர்கள் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே தங்களுக்கு இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கிறேன்.*

அண்ணல் அம்பேத்கரின் புரட்சி கருத்தான கற்பி - ஒன்று சேர் - புரட்சிசெய் என்ற வாக்கியத்தில் கற்பி என்ற பதம் இரண்டு பொருட்களை உணர்த்துவதாக நாம் அறிவோம். அவை ஏட்டுக்கல்வி (பள்ளிக்கல்வி), சமூக கல்வி மேலும் இச்சமுதாயத்தில் ஏட்டுக் கல்வி பயின்றவர்களை விட தங்களைப் போன்ற சமூக கல்வி பயின்றவர்களால்தான் மிகப்பெரிய சமூக மாற்றங்ககளை செயல்படுத்த முடிந்தது என்பதை நான் அறிவேன். அதே போல் ஏட்டுக்கல்வி பயின்றவர்களுக்கும் கூட உரிமை பெற்றுத்தருவதில் தங்களை போன்ற சமூக கல்வி கற்றவர்களால்தான் சாத்தியமாகும் என்பதையும் யாரும் மறுக்கவே முடியாது. ஆகவேதான் தங்களிடம் நான் இவ்விண்ணப்பத்தை பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

நம் நாட்டின் பள்ளிக் கல்வியின் தற்போதைய நிலை என்ன என்பதும் அத்தகைய பள்ளிக் கல்வியை தரும் தனியார் கல்வி நிறுவனங்கள் தற்போது

கமிட்டியும் அமைக்கப்பட்டு அத்தகைய கமிட்டியினால் தகுந்த கட்டணங்கள் விதிக்கப்பட்ட பிறகும் மேற்படி தனியார் (மெட்ரிக்) கல்வி நிறுவனங்கள் தங்கள் செயல்பாட்டை ஒழுங்குப்படுத்தியுள்ளனவா அல்லது இல்லையா என்பது போன்ற வினாக்களுக்கு விடை பகரும் விதமாக இவ்விண்ணப்பத்தை தங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

மேற்படி புற்றீசல் போல் பெருகி வரும் ஆங்கில வழி (மெட்ரிக்) தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்தவும், 6 முதல் 14 வயது வரை உள்ள ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் ஏனைய ஊனமுற்ற குழந்தைகளுக்கான அடிப்படை இலவச கல்வியை உறுதி செய்யும் விதமாகவும், 2002-ம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தின் ஷரத்து 21-ல் ஏற்படுத்தப்பட்ட திருத்தம் மூலம் 21 (எ) என்ற உட்பிரிவு ஷரத்து கொண்டு வரப்பட்டது. அதன்படி அரசின் கொள்கை முடிவாக மட்டுமே இருந்த வந்த (Directive Principles of State policy Art.– 37, 45) அரசின் இலவச கல்வியானது, அடிப்படை உரிமையானது. மேற்படி அடிப்படை உரிமையான இலவச கல்விக்கு உயிர் கொடுக்கும் விதமாக கடந்த 2009-ம் ஆண்டு மத்திய அரசால் இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டமும் இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள சாராம்சங்களும் உண்மையிலேயே இந்த தனியார் (மெட்ரிக்) பள்ளிகளினால் பின்பற்றப்படுகின்றனவா ? இல்லையா?

அதே போல், இந்த அரசால் மேற்படி சட்டமும் அதன் சாராம்சங்களும் வலியுறுத்தி முறையாக அமுல்படுத்தப்படுகின்றனவா இல்லையா என்ற கேள்விக்கான விடையை தேடுவதற்கு முன்பு தனியார் (மெட்ரிக்) கல்வி நிலையங்களின் தோற்றம் மற்றும் செயலாக்கம் பற்றியும் இச்சட்டத்தில் உள்ள சிறப்பம்சங்களை ஆய்வு செய்ய வேண்டியது இங்கு அவசியமாகும்.

## *தனியார் (மெட்ரிக்) கல்வி நிலையங்களின் அங்கீகார பதிவு*

பின் வரும் முக்கிய நிபந்தனைக்குட்பட்டே ஒவ்வொரு தனியார் (மெட்ரிக்) கல்வி நிலையங்களின் பதிவு செய்யப்படுகின்றன அவை பின்வருமாறு.

2. மேற்படி ஒவ்வொரு பள்ளியும் 25% இட ஒதுக்கீட்டை SC/ST மக்களுக்கும், இதர பிற்படுத்தப்பட்ட மற்றும் ஊனமுற்றவர்களுக்கும் ஒதுக்க வேண்டும்.

3. மேற்கண்ட 25% இடத்திற்கான கட்டணத்தை அந்தந்த சம்பந்தப்பட்ட அரசு மேற்படி பள்ளிகளுக்கு செலுத்தி விடும். இருப்பினும் மேற்படி பள்ளியானது தனது கல்வி நிலையத்தைக் கட்டும் போது சம்மந்தப்பட்ட அரசிடமிருந்து இலவசமாகவோ அல்லது மலிவான விலையிலோ (Concessional Rate) அப்பள்ளிக்கு தேவையான நிலம், கட்டிடங்கள், தளவாடங்கள் மற்றும் இதர வசதிகளை பெற்றிருந்தால் அக்கல்வி நிலையங்களுக்கு மேற்படி 25% இலவச கல்விக்கான கட்டணத்தை அரசு செலுத்த வேண்டியது இல்லை. (பார்க்க பிரிவு 12(2))

4. மேற்படி பள்ளிகள் சொசைட்டி அல்லது டிரஸ்ட் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். (ஆகவே டிரஸ்ட் மற்றும் சொசைட்டி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதால் அச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து இலவச மானியங்களையும் சிறப்பு சலுகைகளையும் மேற்படி ஒவ்வொரு தனியார் (மெட்ரிக்) கல்வி நிறுவனங்களும் பெற்று வருகின்றன.

5. எந்த ஒரு (Capitation Fees) நன்கொடையும் பெறக்கூடாது. மாணவ மாணவிகளுக்கோ, பெற்றோர்/பாதுகாவலர்களுக்கோ (Screening Test) நேர்காணல் எதையும் நடத்தக் கூடாது.

6. மேற்படி பள்ளிகள் எந்த ஒரு தனி நபருக்கோ, குழு கூட்டமைப்பு மற்றும் எவருக்கேனும் இலாபம் பெற்றுத் தரும் வகையில் நடத்தப்படக் கூடாது.

7. அதே போல் வயது சான்றிதழ் இல்லை என்று எந்த ஒரு இந்திய குடிமக்களுக்கும் பள்ளியில் சேர்க்க அனுமதி மறுக்க கூடாது.

8. மேற்கண்ட முக்கிய நிபந்தனைகளுக்குட்பட்டே ஒவ்வொரு தனியார் (மெட்ரிக்) பள்ளிகளும் FORM II ...

நிபந்தனைகளும், விதிகளும் இருந்து யாருக்கு என்ன பயன். ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்காகவும், சாதி ஒழிப்பிற்காகவும், சமத்துவத்திற்காகவும், தொடர்ந்து சுயநலமற்று போராடிவரும் என் தோழர்களே என்ன செய்ய போகிறீர்கள் ?

**மத்திய அரசின் இலவச, கட்டாய கல்விச் சட்டம் 2009 மற்றும் தமிழக அரசின் விதிகள் 2011 என்ன சொல்கின்றது.**

*பிரிவு 2-ன்படி*

| | | |
|---|---|---|
| **Disadvantaged group** | - | **SC, ST** |
| **weaker sections** | - | ஆண்டு வருமானம், அரசு நிர்ணயித்தபடி குறைவாக உள்ளவர்களின் குழந்தையும், (SC,ST அல்லாதவர்கள் அதாவது பிற்படுத்தப்பட்ட மற்றும் ஊனமுற்ற மாணவர்கள் ) |

**Sec. – 2 (N)** ன்படி

| | | |
|---|---|---|
| **School means** | - | (1) அரசால் நடத்தப்படும் பள்ளிகள் |
| | | (2) அரசு உதவி பெறும் பள்ளிகள் |
| | | (3) அரசு உதவி பெறும் பள்ளிகள் **(Specified Category School)** (i.e., கேந்திரிய - நவோதயா வித்யாலயா, சைனிக் பள்ளி மற்றும் தனித்தன்மை வாய்ந்த பள்ளிகள்) |
| | | (4) அரசிடமிருந்து எந்த ஒரு உதவியும் பெறாத பள்ளிகள். |

***Sec. 12-ன்படி மேற்படி பள்ளிகள் அனைத்தும் குறைந்தபட்சம் 25% (Disadvantaged) பின் தங்கிய மற்றும் (Weaker Section's of) நலிவுற்ற மாணவ-மாணவிகளுக்கு இலவசமாகவும், கட்டாயமாகவும், இலவசமாகவும் பள்ளியில் அனுமதி வழங்கி (Pre. K.G. முதல் LKG,***

*மாணவிகளுக்கான கட்டணம் அந்தந்த (மாநில) அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும். இருப்பினும் மேற்படி பள்ளிகள் சம்பந்தப்பட்ட மாநில அரசிடமிருந்து, எந்த ஒரு நிலமோ, கட்டிடமோ, தளவாடங்களோ, மற்றும் ஏனைய வசதிகளை இலவசமாகவோ அல்லது மலிவான விலையிலோ பெற்றிருந்தால் அப்பள்ளிகள் யாவும் மேற்படி இலவச கல்வி வழங்குவதற்கான எந்த ஒரு கட்டணத்தையும் மாநில அரசிடமிருந்து பெற முடியாது.*

Sec-13-ன்படி மேற்படி பள்ளிகள் மாணவர்களிடமிருந்து எவ்வித நன்கொடையும் பெறக் கூடாது. அதே போல் மாணவர்களையோ அல்லது அவர்களது பெற்றோர்கள்/பாதுகாவலர்களை நேர்காணலுக்கு உட்படுத்தக்கூடாது. மீறி நன்கொடை பெற்றால் பெற்ற நன்கொடை தொகை போல் 10 மடங்கு (10 (Times of donation) அபராதமாக மேற்படி பள்ளிகள் அரசுக்கு செலுத்த வேண்டும். அதே போல் நேர்காணலுக்கு உட்படுத்தினால் முதல் முறையாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) அபராதமும் தொடர்ந்து செய்தால் ஒவ்வொரு முறையும் ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அபராதத்தையும் மேற்படி பள்ளிகள் அரசுக்கு செலுத்த வேண்டும். மேற்கண்ட அபராத தொகையை பார்க்கும் போது ஒரு பள்ளிகள் கூட தமிழகத்தில் மேற்படி அபராதத்தை செலுத்துவதில் இருந்து மிஞ்சாது என்பதை தாங்கள் புரிந்து கொள்ளலாம். ஏனென்றால் தமிழகத்தில் எல்லாம் முக்கிய பிரபலமான தனியார் (மெட்ரிக்) பள்ளிகளும் மேற்படி சட்ட மீறலை அனைவரும் அறிய தொடர்ந்து செய்தே வருகின்றன என்பதை தாங்கள் அறிய வேண்டும்.

*Sec. 14-ன்படி வயது சான்று இல்லையென கூறி எந்த ஒரு மாணவருக்கும் சேர்க்கை மறுக்க கூடாது.*

*Sec. 16-ன் படி*

*8-ம் வகுப்பு வரை எந்த மாணவரையும் நீக்கம் செய்யவோ, தேர்ச்சி பெற*

Sec. 35-ன் படி சம்பந்தப்பட்ட மாநில அரசு மேற்படி சட்டத்தை முறையாக அமுல்படுத்திட தேவையான எந்த ஒரு விதிமுறைகளையும் வகுக்கலாம் என்று மேற்படி சட்டத்தின் பிரிவுகள் தெளிவாக கூறுகின்றன. மேலும் மேற்படி சட்டத்தை தமிழகத்தில் அமுல்படுத்த சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு தனிநபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தொடர்ந்து கடந்த 08.11.2011 அன்று தமிழக அரசு 21 விதிகள் அடங்கிய ஒரு விதிமுறையை வெளியிட்டது. அதில் உள்ள சிறப்பம்சங்கள் பின்வருமாறு

*விதிமுறை. 5-ன் படி*

***மேற்படி பள்ளியில் 25 % அடிப்படையில் படிக்கும் மாணவர்களுக்கு Text books, எழுது பொருட்கள், மற்றும் சீருடை இலவசமாக வழங்கப்பட வேண்டும். இதில் ஊனமுற்றவர்களுக்கு சிறப்பு கவனம், சிறப்பு உதவி தேவைக்கேற்ப வழங்கப்பட வேண்டும்.***

- இதில் மிகவும் சிறப்பான ஒரு விசயம் என்னவென்றால், விதிமுறை 9-ன்படி மேற்படி பள்ளிகள் யாவும், வருடந்தோறும் ஜீலை மாதம் சம்பந்தப்பட்ட **Local Authority** யிடம் தங்கள் பள்ளியில் இலவச கட்டாயக் கல்வி அளிக்கப்பட்ட மாணவர்கள் பற்றிய விவரம் குறித்து ஒரு அறிக்கையை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் மேற்படி இலவச கல்வி அளித்ததற்கான கட்டணங்களை அரசிடமிருந்து பெறுவதற்காக வங்கியில் ஒரு கணக்கு ( Account) வைத்திருக்க வேண்டும். மற்றப்படி இலவச கட்டாய உரிமைச்சட்டம், 2009-ன்படி உள்ள அனைத்து பிரிவுகளையும் ஒவ்வொரு பள்ளியும் சிறந்த முறையில் அமுல்படுத்த வேண்டும், இல்லையெனில் பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்பவை எல்லாம் மேற்படி தமிழக அரசு விதித்த விதிகளின் சாராம்சம்.

இவ்விதிகள் யாவும் ஒருபுறம் இருக்க தற்போது 13.01.2012 தேதி அன்று தமிழக கல்வித்துறை இயக்குநரகம் ஒரு அறிவுப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி மே மாதம் 2-வது வாரத்திற்கு முன்பு தமிழகத்தில் உள்ள எந்த ஒரு பள்ளியும்

தனியார் முதலாளிகளின் (மெட்ரிக்) பள்ளிகள் 2012-ம் ஆண்டு பள்ளி சேர்க்கைக்கான அட்மிசனையே முடித்து விட்டன. இவையெல்லாம் நம்மை ஆளும் அரசுக்கு தெரியாதா?

தனியார் கல்வி நிறுவங்களில் படிக்கும் தலீத் இன மாணவ - மாணவிகளுக்கும் இலவச கல்வி வழங்க 16.01.2012-ம் தேதி அரசு ஆணை வெளியிட்ட இத்தமிழக அரசுக்கு மேற்படி தலீத் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூக மாணவ - மாணவிகளுக்கு (இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ்) அடிப்படை கல்வியே மறுக்கப்பட்ட விசயம் தெரியாமல் போய் விட்டதா ?

என் தமிழ் தேசிய தோழர்களே, “சாமி கும்பிடும் தமிழ் மக்களின் உரிமைக்காக கடவுள் மறுப்பாளரான நான் போராட மாட்டேன்” என்று கூறினால் அது எவ்வளவு பாமரத்தனமோ அதே போல்தான் தமிழ் வழி கற்காமல் ஆங்கில வழி கற்கும் என் தமிழ் மக்களுக்கு தமிழ் வழி கல்வியை தூக்கி பிடிக்கும் நான் போராட மாட்டேன் என்று சொல்வதும், இங்கு பிரச்சினை மொழி வழி கல்வி அல்ல, அடிப்படை கல்வி மேலும் இச்சட்டத்தின் பிரிவு 29 (2) F–ன் கீழ் கல்வி போதிக்கும் முறை முடிந்தவரை அவரவர் தாய் மொழியிலேயே இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆகவே, முதலில் கல்வியை முதலாளிகளிடமும் வந்தேறிகளிடமும் வியாபார பொருளாக மாறி வருவதில் இருந்து தடுப்போம். அதுதான் இப்போது உடனடி தேவை அதனோடு சேர்த்து நம் தாய்மொழி வழிக்கல்வி உரிமையையும், அடிப்படை வசதி கூட இல்லாமல் பல்வேறு இடங்களில் மூடப்பட்டு வரும் அரசு பள்ளிகளை திறக்க கோரியும், உரிய அடிப்படை வசதிகளை அரசு பள்ளிகளுக்கு செய்து தர கோரியும் நம்மை ஆளும் அரசிடம் சம காலத்தில் போராடி வெற்றி பெறுவோம். மேலும் இங்கு சில தனியார் (மெட்ரிக்) பள்ளிகள் அரசு விதித்த கட்டண விகிதத்தில் இருந்த தப்பிக்க தங்கள்

ஆகவே, என் மதிப்பிற்குரிய முற்போக்கு தோழர்களே இக்கடிதத்தை பெற்றவுடன் நம் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவிகளை அவர்களது பகுதிக்கு அருகில் உள்ள தனியார் (மெட்ரிக்) பள்ளிகளில் உடனே அட்மிஷன் கேட்டு விண்ணப்பம் அளிக்க உத்திரவிடவும் அதே போல் இவ்வளவு சிறப்பு வாய்ந்த இலவச கல்வி உரிமை சட்டத்தையும் அதன் விதிகளையும் அமுல்படுத்தாத இத்தகைய பள்ளிகளையும், அதை கண்டும் காணாமல் இருந்து வரும் சம்பந்தப்பட்ட அரசு நிர்வாகிகளையும் உடனே மேற்படி சட்டத்தை அமுல்படுத்தி உண்மையான சட்டத்தின் ஆட்சியை நம் நாட்டில் நிலை நாட்டவும் அதன் மூலம் காரல் மார்க்ஸ், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோர்கள் கண்ட சமத்துவ சமுதாயத்தை குறைந்தபட்சம் கல்வி முறையிலாவது படைத்திடவும் ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் அடிப்படை கல்வி உரிமையை செயல்படுத்திடவும், உரிய நடவடிக்கைகளை எடுத்து முற்போக்கு சக்திகளை ஒருங்கிணைத்து வரலாற்றில் முதன் முறையாக ஒரு மாபெரும் கல்விக்கான புரட்சியை படைத்திட வேண்டும் என்று தங்களை உண்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*" இதற்காக நீங்கள் போராட விட்டால் வேறு யார் போராடுவார்கள்"* கூறுங்கள்

(கைபேசி : 9894642520)

புரட்சிகர நன்றியுடன்,